# இயல் 7.2 - அளவைகள்

பயிற்சி எண் :: 7.2.3.3.E


சரிவகம் - கொள்குறி வகை வினாக்கள் - பயிற்சி - தநாஅபு - பயிற்சி 2.3.8-10

## சரிவகம் - கொள்குறி வகை வினாக்கள் - பயிற்சி - தநாஅபு - பயிற்சி 2.3.8-10

சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

8. உயரம் 5 செ.மீ, இணைப்பக்கங்களின் அளவுகள் முறையே, 8 செ.மீ உம், 10 செ.மீ உம் கொண்ட சரிவகத்தின் பரப்பளவு.

(i) 45 ச.செ.மீ ✓
(ii) 40 ச.செ.மீ
(iii) 18 ச.செ.மீ
(iv) 50 ச.செ.மீ




**சரிவகத்தின் பரப்பளவு காணும் சூத்திரம்** $= \frac{1}{2} \times h\,(a+b)$ ச.அலகுகள்

மதிப்புகளை மாற்றீடு செய்கையில்...

$= \frac{1}{2} \times 5\,(8+10)$


$= \frac{1}{\not 2} \times 5 \times \not{18}^{\,9}$

$= 5 \times 9 = 45$

சரிவகத்தின் பரப்பளவு = 45 ச.செ.மீ

9. பரப்பளவு 140 ச.மீ உம் இணைப்பக்க அளவுகளின் கூடுதல் 10 மீ உம் கொண்ட சரிவகத்தின் உயரம்.

(i) 7 செ.மீ
(ii) 40 செ.மீ
(iii) 14 செ.மீ
(iv) 28 செ.மீ ✓




**சரிவகத்தின் பரப்பளவு காணும் சூத்திரம்** $= \frac{1}{2} \times h\,(a+b)$ ச.அலகுகள்

மதிப்புகளை மாற்றீடு செய்கையில்...

$140 = \frac{1}{2} \times h \times 10$


$\frac{1}{2} \times h \times 10 = 140$

$h = \frac{140\times 2}{10} = \frac{28\not 0}{1\not 0} = 28$

சரிவகத்தின் உயரம் = 28 செ.மீ

10. ஒரு சரிவகத்தில் இணையற்ற பக்கங்கள் சமம் எனில் அது ஒரு

(i) சதுரம்
(ii) செவ்வகம்
(iii) இருசமபக்கச் சரிவகம் ✓
(iv) இணைகரம்




படத்தில் உள்ளது போல $\overline{PQ} \parallel \overline{RS}$. $\overline{PS}$ மற்றும் $\overline{QR}$ இணையற்ற பக்கங்களாக இருந்தாலும் அவை சம நீளமுடையவை.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Tuesday 19th July, 2022 :: 18:17 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.

https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**